

பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்
அஹமதி தமிழ் திருச்சபை
சகல
ஜனங்களைப்
பார்க்கிலும்
நீ
ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்..
உபா 7:14
மலர் : 15
இதழ் : 9
2019
ஜனவரி மாத
செய்தி மலர்



# சபை ஊழியரின் அன்பு மடல்



கிறிஸ்துவுக்குள் அன்பான திருச்சபை குடும்பத்தாரே எல்லாம் வல்ல இறைவன் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் எல்லோரும் நலமாக இருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறேன். என்னுடைய ஆவலும், அனுதின ஜெபமும் அதுவே.

கடந்த வருடம் முழுவதும் நம்மை கண்மனி போல வழிநடத்தின தேவன் இந்த புதிய வருடத்திலும் நம் கூட இருந்து நமது திருச் சபையை சகல ஆசீர்வாதங்களாலும் திருப்திபடுத்தி வழி நடத்துவாராக!

2019 ஆம் ஆண்டைக் காணச் செய்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக! இந்த புதிய வருடத்திற்கு நம் சபைக்கு கர்த்தர் கொடுத்திருக்கிற வாக்குத்தத்தம் "சகல ஜனங்களைப் பார்க்கிலும் நீ ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்" (உபா-7:14) என்பதே.

நம் தேவன் மக்களை ஆசீர்வதிப்பதிலே பிரியமுள்ள தேவன் இனி கீழ் வரும் பகுதிகளில் அவர் ஏன் நம்மை ஆசீர்வதிக்கிறார். அவர் தரும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள நாம் என்ன செய்ய வேண்டும். அவர் எப்படியெல்லாம் ஆசீர்வதிக்கிறார் என்பதை தெளிவாக பார்க்கலாம்.

## 1. ஏன் நம்மை ஆசீர்வதிக்கிறார்..

உபா-7:6,7 கூறுகிறது நீ உன் தேவனாகிய கர்த்தருக்கு பரிசுத்த ஜனம். பூச்சக்கரத்திலுள்ள எல்லா ஜனங்களிலும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை தமக்கு சொந்தமாய் இருக்கும்படி தெரிந்துகொண்டார். சகல ஜனங்களிலும் நீங்கள் திரட்சியான ஜனமென்று கர்த்தர் உங்கள் பேரில் அன்பு வைத்து உங்களை தெரிந்துகொள்ளவில்லை.

நீங்கள் சகல ஜனங்களிலும் கொஞ்சமாயிருந்தீர்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறுகிறார் "நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை நான் உங்களை தெரிந்துகொண்டேன். "பிதா என்னில் அன்பாயிருக்கிறது போல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்" (யோவா-15:9,16) "தேவன் அன்பாகவே இருக்கிறார்" (1-யோவா-4:8)

3 ஆம் பிரியமானவர்களே, தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பு அளவிட முடியாதது நாம் பலவீனர்களாகவும், அழகில்லாதவர்களாகவும், படிப்பறிவு இல்லாதவர்களாகவும், ஏழைகளாகவும், குறைவுள்ளவர்களாகவும் இருக்கலாம். ஆனால் கடவுள் நம்மை போன்றவர்களைத்தான் அதிகமாக நேசிக்கிறார். அதனால்தான் ஆண்டவருடைய பிறப்பு சாதாரண மேய்ப்பர்களுக்கு சொல்லப்பட்டது.

திராட்சை தோட்டத்தில் ஒரே அத்தி மரத்தை நட்டு பராமரிப்பதைப் போல இந்த உலகத்தில் நம்மை விசேஷித்தவர்களாக தேவன் நம்மை அழைத்திருக்கிறார். நிச்சயமாக நம்மை ஆசீர்வதிப்பார்.

## 2.எவ்வாறு ஆசீர்வாதத்தை சுதந்தரிப்பது.........

கடவுள் அருளும் ஆசீர்வாதங்களை நாம் பெற வேண்டுமென்றால் நாம் மாம்ச இச்சைகளை விட்டு மறுபிறப்பு அடைந்து குழந்தைகளைப் போல மாற வேண்டும். "முன்னே நீங்கள் தேவனுடைய ஜனங்களாயிருக்கவில்லை, இப்பொழுதோ அவர்களுடைய ஜனங்களாய் இருக்கிறீர்கள். முன்னே நீங்கள் இரக்கம் பெறாதவர் -களாயிருந்தீர்கள், இப்பொழுதோ இரக்கம் பெற்றவர்களாயிருக்கிறீர்கள". ஆகவே நீங்கள் ஆத்துமாவிற்கு விரோதமாய் போர் செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலகி நற்கிரியைகளை செய்யுங்கள். (1-பேது-2:10-12)

அப்பொழுது கர்த்தர் நம்மை அவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்கு தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும் ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்கு சொந்தமான ஜனமாயும் மாற்றி ஆசீர்வதிக்கிறார்.
(1-பேது-2:9) அப்பொழுது மற்றவர்களுக்கும் ஆசீர்வாதத்தை வழங்கும் விதத்தில் சாட்சியான வாழ்வை ஆண்டவர் நமக்கு கொடுத்து அவருடைய உன்னதமான ஊழியத்தை வைராக்கியமாக செய்ய வைக்கிறார். மல்கியா தீர்க்கதரிசி சொல்வது போல நீதிமானுக்கும் துர்மானுக்கும் தேவனுக்கு ஊழியம் செய்கிறவனுக்கும், அவருக்கு ஊழியம் செய்யாதிருக்கிறவனுக்கும் இருக்கும் வித்தியாசத்தை காண்பீர்கள். (மல்கி-3:18)

## 3. எப்படியெல்லாம் ஆசீர்வதிக்கிறார்...

தன்னுடைய ஊழியத்திற்காக பிரித்தெடுத்த சீஷர்களை பார்த்து ஏதாகிலும் உங்களுக்குக் குறைவாயிருந்ததா என்றார். அவர்கள் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை என்றார்கள். (லூக்-22:35) ஆம் ஆண்டவர் நமக்கு அருளும் ஆசீர்வாதம் குறைவற்ற ஆசீர்வாதம். அதுமட்டுமல்ல ஆண்டவர் அருளும் ஆசீர்வாதம் பெருகிக்கொண்டே இருக்கும் அவர் வர்த்திக்கப் பண்ணுவார். நம் எல்லைகளை விருத்தியடையச் செய்வார்.

" நீ வலது புறத்திலும் இடது புறத்திலும் இடங்கொண்டு பெருகுவாய். உன் சந்ததியார் ஜாதிகளை சுதந்தரித்துக்கொண்டு பாழாய் கிடந்த பட்டணங்களை குடியேற்றுவிப்பார்கள்" (ஏசா–54:3) இப்படி பெருகச் செய்வதோடு கூட மற்றவர்களுக்கும் கொடுக்கத் தக்கதாக ஆசீர்வதிக்கிறார். பாருங்கள் 5 அப்பம் 2 மீன்களை பெருக செய்து 5000 புருஷர் சாப்பிட்டு 12 கூடை நிறைய மீதமெடுக்க கிருபை பாராட்டினார். அல்லேலூயா

கர்த்தர் தாமே நம் திருச்சபையினர் ஒவ்வொருவரையும் இந்த 2019–ம் வருடம் முழுவதும் ஒரு குறைவும் இல்லாமல் ஆசீர்வதிப்பாராக. விசேஷித்த நன்மைகளும், கிருபைகளும் ஆண்டவர் அருளி விசுவாசத்தில் நம்மை நிலைத்திருக்க செய்து வேறு பிரித்து பலுகி பெருக செய்து அளவில்லாத சந்தோஷத்தையும், சமாதானத்தையும் வழங்கி அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து நம்மை விசேஷப்படுத்தி மற்ற எல்லா ஜனங்களையும் விட மேன்மையாக வைப்பாராக.

கர்த்தரின் பணியில்,

அன்பு சகோதரன்

சகோ. ஸ்டாலின்

பிரியமான சகோதர சகோதரிகளே நம் ஆவிக்குறிய நிலையில் செழிப்பதற்கு கீழ்காணும் கேள்விகளை தினசரி இல்லாவிட்டாலும் அவ்வப்போது நம்மை நாமே கேட்டுப் பார்த்துக் கொள்வோம்.

1. நான் இன்று யாராகிலும் ஒருவரை தீமையாகப் பேசினேனா அல்லது சிந்தித்தேனா?

2. நான் இன்று ஏதேனும் வீணான வார்த்தைகளைப் பேசினேனா?

3. நான் எவ்வித பக்தி விருத்தியும் அல்லது பிரயோஜனமுமற்ற எதாகிலும் ஒன்றை பேினேனா அல்லது செய்தேனா?

4. நான் இன்று யாரிடமாவது சுயநலமாய் நடந்து கொண்டேனா?

5. நான் யாரேனும் ஒருவரின் வீழ்ச்சியை கண்டு மகிழவோ அல்லது அதைபற்றி அக்கறையற்றவனாகவோ இருந்தேனா?

6. நான் இன்று தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையுமே முதலாவது தேடினேனா?

## ஆளுகிறவர்களாயிருங்கள்

ஐந்து ராஜாக்களும் மக்கெதாவிலிருக்கிற ஒரு கெபியிலே ஒளித்திருந்து அகப்பட்டார்கள் என்று யோசுவாவுக்கு அறிவிக்கப்பட்டது. அப்பொழுது யோசுவா: பெரிய கற்களை கெபியின் வாயிலே புரட்டி, அவ்விடத்தில் அவர்களை காவல் காக்க மனுஷரை வையுங்கள். நீங்களோ நில்லாமல் , உங்கள் சத்துருக்களை துரத்தி, அவர்களுடைய பின்படைகளை வெட்டி போடுங்கள்: அவர்கள் தங்கள் பட்டிணங்களிலே பிரவேசிக்கவொட்டாதிருங்கள். உங்கள தேவனாகிய கர்த்தர் அவர்களை உங்கள கையில் ஒப்பு கொடுத்தார் என்றான். ( யோசுவா 10:17-19)

வேத புத்தகத்தில் சாதனை படைத்த அநேக பக்த்தர்களை பற்றி வாசிக்கிறோம். அதில் இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து விடுவித்து, கானானுக்கு வழி நடத்தி வந்த மோசேயை பற்றியும், கானான் தேசத்தை அவர்களுக்கு பங்கிட்டு கொடுத்த யோசுவாவின் சாதனைகளை பற்றியும் வாசிக்கிறோம். யோசுவா ஒரு ஆவிக்குறிய தலைவனாய் இருந்து தேவ ஜனங்களுக்காய் யுத்தங்களை நடத்தி வெற்றி கண்ட அனுபவமுடையவர். அவர்களின் சாதனைகளில் ஒன்றாகிய கானானின் ஐந்து ராஜாக்களை ஒரே கெபியில் போட்டு அடைத்து, அவர்களின் சேனைகளை முறியடித்து, இஸ்ரவேலரை கானானில் குடியேற்றிய சாதனை சரித்திரம் மிக முக்கியமானது. அதை நாம் சிந்திப்பதால் நமது வெற்றி வாழ்க்கைக்கு தேவயைான ரகசியங்கள் விளங்க தொடங்கும். தேவ ஆவியானவர்தாமே நமது சிந்தனைகளை அவரின் சித்தத்துக்கு நேராக திருப்புவாராக!

இஸ்ரவேலர் கானானை சுதந்தரித்துக் கொள்ள விடாதபடி யோசுவாவை எதிர்த்த அந்த ஐந்து ராஜாக்களும் எருசலேம், எபிரோன், யர்முத், லாகீஸ், எக்லோன், ஆகிய இடங்களை ஆண்டவர்கள் (யோசு10:5)நமது ஐம்புலன்களும் அந்த ராஜாக்களாம். அவர்கள் அடைக்கபட்டிருந்த கெபி நமது சரீரமாம். அவர்களின் பின் படைகள், நமது ஐம்புலன்களின் செயல்பாடுகளாம், யோசுவா அவர்களின் பின்படைகளை அழித்து கொன்று போட்டது, நமது சரீரத்தில் போராட்டம் விளைவிக்கும்செயல்பாடுகளை அடக்கி ஒடுக்குவதற்கும்,ராஜாக்களை கொன்றது ஐம்புலன்களையும் ஜெயிப்பதற்கும், ஒப்பாக நாம் பொருள் கொள்ள வேண்டும்.

நமது அனுதின வாழ்க்கையில், ஆவிக்கு (அல்லது தேவ பிரமாணத்துக்கு)விரோதமாக கிரியை செய்வது நமது ஐம்புலன்களே, நமது ஜீவியத்திற்கு தடையாயிருப்பதும் வெளியிருந்து வரும்தடைகள் அல்ல, நமக்கு உள்ளாக நமது ஐம்புலன்களால் வரும் தடைகளே, நமது ஐம்புலன்களை அடக்கினால், ஜீவித்தில் நாம் வெற்றி பெறுவோம் என்பதில் ஐயமில்லை, ஆகவே அந்த ஐந்து ராஜாக்களின் சுபாவங்களையும் நாம் ஐந்து புலன்களாக சிந்தித்து, அவைகளை ஜெயிக்கும் வழிகளை கண்டு அறிவோமாக.

# 1. நமது சரீரம் ( மாம்சம்) : முதல் ராஜா

சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வந்தபோது, அமலேக்கு அவர்களுக்கு வழிமறித்த செய்கையை மனதிலே வைத்திருக்கிறேன். இப்பொழுதும் நீ போய், அமலேக்கை மடங்கடித்து, அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சங்கரித்து, அவன்மேல் இரக்கம் வைக்காமல், புருஷரையும், ஸ்திரீகளையும், பிள்ளைகளையும், குழந்தைகளையும், மாடுகளையும், ஆடுகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும் கொன்று போடக்கடவாய் என்கிறார் .(I சாமு 15:2-3 )

தேவன் இஸ்ரவேலின் முதல் ராஜாவாகிய சவுலிடம் சொன்ன கட்டளையை, சொன்னபடி அவன் நிறைவேற்றவில்லை. சவுல் சாமுவேலை கண்டவுடன். கர்த்தருடைய வார்த்தைகளை நிறைவேற்றினேன் என்றான். அதற்கு சாமுவேல் அப்படியானால் என் காதுகளில் விழுகிற ஆடுகளின் சத்தமும் எனக்கு கேட்கிற மாடுகளின் சத்தமும் என்ன? என்பதற்கு சவுல் ஜனங்கள் உம்முடைய தேனாகிய கர்த்தருக்கு பலியிடும்படிக்கு அவைகளில் நலானவைகளை தப்பவைத்தார்கள். மற்றவைகளை முற்றிலும் அழித்து போட்டோம் என்றான். (15:13-15)அதற்கு சாமுவேல் கர்த்தருக்கு கீழ்படிவதை காட்டிலும் சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்கு பிரியமாய் இருக்குமோ என்று சொல்லி நீர் கர்த்தருடைய வார்த்தையை புறக்கணித்தபடியால் தேவன் உம்மை ராஜாவாயிராதபடிக்கு புறக்கணித்தார் என்றான்.

அருமையானவர்களே அமலேக்கியரையும் அவர்களுக்கு உண்டான எல்லாவற்றையும், அழித்து போடுங்கள் என்று தேவன் சொல்லி இருக்க, நலமானதை தப்புவித்த சவுல், கர்த்தருக்கு பலியிடும்படி அதை வைத்திருப்பதாக சொல்லுகிறான், இது தேவனுக்கு பிரியமனதல்ல, தேவன் தன் வார்த்தையின்படியே செய்கிறவனையே நோக்கி பார்க்கிறார். நாம் அதற்கு புது விளக்கமோ, இலாப நஷ்டங்களையோ, சாக்காக கூறிக்கொண்டு தேவனுடைய உள்ளத்தை புண்படுத்த கூடாது.

இன்று அநேகர் தேவ வார்த்தகைக்கு கீழ்படிவதற்கு பதிலாக, ஞானம் என்ற பெயரிலே தேவனை துக்கபடுத்துவதோடு தங்கள கீழ்படியாமையை, மறைக்கிறதற்கு புது விளக்கம் சொல்லி கொண்டு தேவ சித்ததத்திற்கு மாறானவைகளை செய்கிறவர்களாய் இருக்கிறார்கள்,சாத்தானை தள்ளபட்டது போல, தள்ளபட்டு போவார்கள், சிந்தித்து பாருங்கள் தங்களுக்கு இஷ்டமில்லை என்பதற்காக வேறு விளக்கம் கூறி வேத வசனத்தை புரட்டகூடாது. தேவனுக்கு கீழ்படிந்திருப்பதே ஆசீர்வாத்தை கொண்டு வரும்.

அமலேக்கியரையும் அவர்களுக்கு உண்டான எல்லாவற்றையும், அழிக்க தவறிய சவுல், கடைசியில் அமலேக்கியனால் , கொன்று போடப்பட்டான் என்பதை

நாம் மறந்து விட கூடாது. (2 சாமு 1 :13-14)கிறிஸ்துவினுடையவர்கள். தங்கள் மாம்சத்தையும், அதின் ஆசை இச்சைகளையும், சிலுவையில் அறைந்திருக்கிறார்கள் என்ற (கலாத் 4:24) வசனத்தை சிந்தித்து, நமது சொந்த மாம்சத்தை குறித்து எச்சாக்கையாய் இருப்போமாக.!

## 2 கண் (பார்வை) இரண்டவது ராஜா

கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது; உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும்.(மத் 6:22)

நமது சரீரத்தில் கண் மிகவும் முக்கியமான உறுப்பு, கண்ணானது சரீரத்தின் விளக்கு என்று வேதமே சொல்கிறது, கண் தெரியாத மனிதன் தானாக ஒன்றும் செய்ய இயலாதவன், மற்றவர்கள் உதவியை நாடுகிறவன், கண் இல்லையென்றால் பழகிய இடங்களில் கூட தடவித்தரிய வேண்டும், யானையை பார்த்த குருடர்களை போல ஒவ்வொருவரும் அவரவர் கையில் அகப்பட்ட பகுதியை தடவி பார்த்துக் கொண்டு யானை இப்படித்தான் இருக்கிறது என்பார்கள். ஒருமனமிருக்காது, தரிசனமில்லாதவர்கள் ஒன்று பட முடியாது, ஊழியர்களின் தகுதிகளாக சொல்லப்படும் இடத்தில் பூவிழுந்து கண்ணை உடையவன் ஊழியத்திற்கு தகுதியற்றவன் என்று சொல்லப்பட்டிருப்பதை பார்த்தால்(லேவி 21:17-20)கண் எத்தனை அவசியம் என்பதை தெரிந்து கொள்ளலாம், இன்று அநேக ஊழியரின் கண்களே திறக்கபடாத படியால், யானையை பார்த்த குருடர்களை போல எதையாவது பிடித்து கொண்டு அதுவே யானை என்று புதிய புதிய உபதேசம் பண்ணுகிறார்கள்.

ஆகாரின் கண்கள் திறக்கப்பட்டபோதுதான் தண்ணீர் துறவை காண முடிந்தது. ( ஆதி 21:19) குடித்து அவரும் பிள்ளைகளும் ஜீவன் பெற்றார்கள். கேயாசியின் கண்கள் திறக்கபட்டபோதுதான் தங்களுக்கிருக்கும் பாதுகாப்பை காண முடிந்தது.(2 ராஜா 6:16,17). பர்த்திமேயுவின் கண்கள் திறக்கபட்ட போதுதான் இரட்ச்சகரை கண்டு ஆனந்தித்தான். பிச்சை கேட்கிற தொழிலையே விட்டொழித்தான் (மாற் 10:49-50)வேதத்தின் மகத்துவங்களையும், அதிசயங்களையும், பார்க்க வேண்டுமானால் நமது கண்களும் திறக்கபட வேண்டும், ( சங் 119:18)இவைகளிளெல்லாம் மாம்ச கண்களினால் அல்ல, நமது ஆவிக்குறிய கண்கள் திறக்கபடுவதால் மட்டுமே உண்டாகும் நன்மைகள் என்பதை சிந்தித்து கொள்ளலாம்.

கண் அதாவது பார்வைதான், பாவம் உலகத்தில் வருவதற்கும் காரணமாயிற்று. (அந்த பழம் பசிப்புக்கு நல்லதென்று கண்டாளே ஏவாள்)மனிதன் நித்திய ஜீவனை அடைகிறதற்காக அவரை நோக்கி பார்க்கவும் கண்தான் காரணமாயிற்று(யோவா 3:14,15) ஆகவே நாம் பார்வையை குறித்து

கவனமாயிருக்க வேண்டும். பார்வையை. மகா வெளிச்சம் அல்லது தரிசனம் எனலாம்.

ஏலிக்கு பார்வை குறைந்ததால் (தரிசனம் குறைந்ததால்) சத்தம் கேட்க இயலாமல் போய், ஊழியத்தை இழந்தார் ( 1சாமு 3:2-4) சிம்சோன் தன் கண்ணுக்கு பிரியமாய் இருந்தவளையே திருமணம் செய்து வைக்க வேண்டினான், கடைசி நாட்களில் தன் கண்களை இழந்து சிறைச்சாலையிலே மாவரைத்து. சித்திரவதை அனுபவித்தான். (நியா 14:1-3)

ஆகவே கண்களை குறித்து ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். நமது ஆவிக்குறிய கண்கள் தெளிவாய் இருந்தால் நமது ஆவிக்குறிய ஜீவியமும் தெளிவாக இருக்கும். உன் கண் உனகது இடறல் உண்டாக்கினால் அதை பிடுங்கிப் போடு, இரண்டு கண்களும் உடையவனாய் நீ நரகத்திலே தள்ளப்படுவதை பார்க்கிலும் ஒற்றை கண்ணை உடையவனாய் நீ ஜீவனிலே பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும் என்று இயேசுவே சொன்னார் (மத் 6:28-30)

## 3 காது ( கேள்வி ) மூன்றாவது ராஜா

என் காதினால் உம்மைக்குறித்துக் கேள்விப்பட்டேன்; இப்பொழுதோ என் கண் உம்மைக் காண்கிறது.(யோபு:42:5)

தேவன் நமக்கு தந்த ஐம்புலன்களும் நல்லவைகளே, அவைகளை நல்லவைகளுக்கு பயன்படுத்தவே தேவன் கொடுத்திருக்கிறார். ஆனால் மனிதன் அவைகளை தீமைகளுக்காக பயன்படுத்தியதாலும், பயன்படுத்துவதாலுமே, மனித வாழ்க்கையில் பிரச்சனைகள் வருகின்றன. நாம் நமது ஐம்புலன்களை அடக்கி அவைகளை நன்மைகளுக்காக பயன்படுத்துவோமானால் ஆசீர்வதிக்கபடுவோம்.!

ஏவாள் சாத்தானின் பேச்சுக்கு தன் காதை சாய்த்ததால்தான் பாவம் உலகில் பிரவேசித்தது, இன்றும் விசுவாசிகளின் காதுகள் கார்பரேஷன் குப்பை தொட்டிகளை போல, ஆகாதவைகள் அனைத்யையும் வாங்கி கொண்டு, நல்லதவைகளையும் அதே காதில் வாங்குவதால், அந்த நல்லவைகளின் வல்லமை குறைந்து போக காரணமாகி வருகின்றனர்.!

காதுள்ளவன் கேட்க்கடவன் என்றும் (வெளி 2:7,11,17,29,) கேட்கிறதற்கு காதுள்ளவள் கேட்க்கடவன் என்று (8:8-14:35)வேதம் சொல்லுவதை கவனியுங்கள். காதுள்ள யாவருக்கும் கேட்க்கும் திறன் இருக்கிறதுதான், இதிலே வெறுமனே , கேட்கிறவாகளாக மாத்திரம் இல்லாமல் அதன் படி செய்கிறவர்களாகவே இருக்க (யாக் 1:22) காதுகளை தேவன் கொடுத்து இருக்கிறார்,கேட்டும் கீழ்படியாத ஒருவனுக்கு காதுகள் இருந்தும்

பிரயோஜனமில்லை என்பதை தெரிவிக்கவே தேவன் கேட்கிறதற்கு காதுள்ளவன் கேட்க்ககடவன் என்றார்.!.

எரேமியா தீர்க்க தரிசியை தேவன் அழைத்து, நீ போய் ரேகாவின் புத்திரரை நோக்கி , வாருங்கள் வந்து திராட்சை ரசம் குடியுங்கள் என்றுசொல்லு(எரே 35:3-8)என்றார். எரேமியா அப்படியே ரேகாவின் புத்திரரை அழைத்த பொழுது: நாங்கள் திராட்சை ரசம் குடிக்கிறதில்லை, ஏனென்றால் எங்கள் தகப்பன் யோனதாப், நீங்கள் பரதேசியாய் தங்குகிற தேசத்திலே நீடித்திருக்கும்படிக்கு நீங்களும் உங்கள் பிள்ளைகளும், திராட்சை ரசம் குடியாதிருப்பீர்களாக என்று சொல்லியுள்ளார். நாங்கள் எங்கள் தகப்பன் யோனதாபின் சத்தத்திற்கு இதுவரை கீழ்படியாதிருந்தோம் (எரே35:5-9) என்றார்கள். !

கவனியுங்கள், ஒரு மனிதனின் வார்த்தைகளை, அவன் சந்ததியார் கேட்டு, அதை பல தலைமுறைகளானாலும் கை கொண்டு வருகிறார்கள். அந்த வார்த்தைகளை சொன்ன தகப்பன் மரித்து போனான், எனினும் அவன் வார்த்தைகள் இன்று வரை கை கொள்ளப்படுகிறது, அப்படியனால் ஜீவனுளள தேவனுடைய வார்த்தைகளை அவரது ஜனங்கள் எவ்விதம் கை கொள்ள வேண்டும்? அந்தோ மறந்துவிட்டனரே என்று தேவன் அங்கலாக்கிறார். !

சவுல் ராஜாவாக ஏற்படுத்தபட்ட போது சில பேலியாளின் மக்கள் அவனா நம்மை இரட்சிக்க போகிறான் என்று சொல்லி அவனுக்கு காணிக்கை கொண்டு வராமல் அவனை அசட்டை பண்ணினார்கள், அவனோ காது கோளாதவன் போல் இருந்தான். (1 சாமு 10:26,27)

அநேக சமயங்களில் நாம் சிலர் பேசுகிற அவதூறுகளுக்கும், பொய் வாந்திகளுக்கும் செவி கொடுத்து விடுகிறோம். அவைகளை கேட்க நேர்ந்தாலும் கேளாதவர்களை போல இருக்க வேண்டும், ரோசம்,மானம், என்று நமது மாம்ச வைராக்கியங்களை, பாராட்ட தொடங்கி, பதிலுக்கு பதில் செய்ய துணிந்து விடுகிறோம். அது ஆவிக்குறியவர்களின் செய்கையல்ல. இயேசு, தான் தூஷிக்கபட்டபேதும், முகத்தில் துப்பபட்ட போதும் யாதொரு சக்கிதியுமற்றவரை போல இருந்ததின் ரகசியம் என்ன? பிதாவின் சித்தத்திற்கு ஒப்புகொடுத்த அற்பணிப்பு! சகித்து போவது பெலவீனம் அல்ல. இயேசு சகித்ததால்தான் ஜெபித்தார் !ஜெயித்தார். ஜெயித்ததால் இன்று உலகம் முழுதும் போற்றபடுகிறார் புகழப்படுகிறார். நாமும் நமது காதுகளை கவனிப்போம். கேட்க வேண்டியதை கேட்க வேண்டும். கீழ்படிய வேண்டியவைகளுக்கு கீழ்படிய வேண்டும். கேளாதது போலிருக்க வேண்டியவைகளுக்கு, நாம் கேளாதவர்கள் போலவே இருக்க கற்று கொள்ள வேண்டும்.

அல்லேலூயா!

(மற்ற ராஜாக்களை குறித்து இன்னும் மலரும் அடுத்த வரும் மலரில்)

"நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; ... " (ஆதி – 12:2)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வி. ஷேரன் ஜெனீஃபர் வின்ஸன்ட்
செல்வி. ஜெனட் இயேசுதாஸ்
செல்வி. பிரின்ஸி கமலதாஸன்
செல்வி. ஷெரின் பெனிட்டா ஸ்டாலின்
செல்வி. சாரா ஆல்வின்
செல்வி. அக்சாள் நிசி எபிநேசர்
செல்வி. அபிகால் கிரேஸ் ஜஸ்டின்
செல்வி. காருண்யா ரவிச்சந்திரன்

செல்வன். ஜோஸ்வா ஜீவா
செல்வன். சாமுவெல் ஆல்வின்

சகோதரி. அக்சயா பிரியதர்ஷினி
சகோதரி. ஜீவி பாக்கியவதி
சகோதரி. சுசீலா லாசர்
சகோதரி. சுனிதா சுந்தராஜ்.
சகோதரி. ஜோன் ஆப் ஆர்க் அசோக்குமார்

சகோதரி. சுமதி ஐசக் துரை
சகோதரி. ஹில்டா பால் பாண்டியராஜ்
சகோதரி. விக்டோரியா ராஜன்
சகோதரி. பிரிஸ்சில்லா அந்தோனிசாமி
சகோதரி. எப்சிபா ஸ்டீபன்
சகோதரி. பிரிஸ்சில்லா செங்குட்டுவன்
சகோதரி. அபியா சுனில்

சகோ. இயேசுதாஸ் ஆரோக்கியதாஸ்
சகோ. ஐசக்துரை
சகோ. சுதாகர்
சகோ. சுபின்சிங்
சகோ. பிரேம்குமார்
சகோ. சூர்யா
சகோ. ஆரோக்கியரஜ்
சகோ. செங்குட்டுவன்
சகோ. ராஜ்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

உன்னை இந்த ஜனத்துக்கு எதிரே அரணான
வெண்கல அலங்கமாக்குவேன்; (எரே.15:20)

திருமதி – திரு. தம்புகுமார் டென்னிஸ்
திருமதி – திரு. வில்கின்ஸ் தினகரன்
திருமதி – திரு. சாம் ஆனந்த்
திருமதி – திரு. பாபு
திருமதி – திரு. மணிராஜ்
திருமதி – திரு. சாமுவேல்
திருமதி – திரு. ஷ்ர்மன்ராஜ்( ரினி ரெய்சல்)
திருமதி –திரு. இயேசுரெத்தினம்
திருமதி – திரு. தினேஷ்குமார்
திருமதி – திரு. கனீஷ் ஜோஸ்வா அமலன்

# 2019 ஜனவரி மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 06/01/2019 | சகோ. பிரசாத் | சகோ. ஆரோக்கியதாஸ் |
| 13/01/2019 | சகோ. ஆரோக்கியராஜ் | சகோ. கிறிஸ்டோபர் |
| 20/01/2019 | சகோ. பால் பாண்டியன் | சகோ. அசோக்குமார் |
| 27/01/2019 | சகோ. சுகுமார் | சகோ. ஜெபராஜ் |

## வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4:00 முதல் 5:45 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 04/01/2019 | சகோ. டேவிட் ஜெயகுமார் | சகோ. ஐசக்துரை |
| 11/01/2019 | சகோ. ஆரோக்கிராஜ் /சகோதரி. ஹேமா ஆரோக்கிராஜ் | |
| 18/01/2019 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 25/01/2019 | டாக்டர். பிரைட் செல்வகுமார் | |

**31/12/2018 திங்கள் கிழமை விழிப்பு இரவு ஆராதனை**

watch night sevice

(இடம் : ஜெப வீடு ஃபாஹீல் ) (நேரம் 10:00 முதல் அதிகாலை 2:00)

**01/01/2019 செவ்வாய் கிழமை புது வருட ஆராதனை**

இடம் பரிசுத்த பவுல் ஆலயம் ,அஹமதி

(நேரம் 4:30 முதல் 6:30)

**09/01/2019 சகோதரிகள் ஐக்கிய கூடுகை**

(இடம்–சகோதரி ஹெப்சிபா ஸ்டீஃபன் இல்லம் –அபு ஹலீஃபா) நேரம் 6:30 to 8:30

(வேத வினா நீதிமொழிகளின் புத்தகம்)

**25/01/2019 வாலிப ஐக்கிய கூடுகை**

நேரம் 6:30 to 8:30

(இடம் : ஜெப வீடு ஃபாஹீல் )

(வேத வினா ஆதியாகமம் 1 முதல் 25 அதிகாரங்கள் )

# மிஷனெரிச்செய்தி

## டாமியன் (1840-1889)

இந்த மனிதர் துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்து கொண்டு கிறிஸ்துவின் நிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினார். பசிபிக் மகாசமுத்திரத்திலுள்ள அழகு மிக்க ஹாவாய் தீவுகள் கூட்டத்தில், "மொலாக்காய்" என்று ஒரு சிறு தீவு. இந்தத் தீவில் வாழ்ந்தவர்கள் அனைவரும் தொழு நோயால் பீடிக்கப்பட்டவர்கள். ஒரு காலத்தில் ஐரோப்பா கண்டத்தில் தொழுநோய் வெகுவாய்க் காணப்பட்டது. தெருக்களில் எச்சரிக்கையாய் மணி அடித்துக்கொண்டு செல்லவேண்டும் என்பது கட்டாயம்.

இந்த மணி ஒலி ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் கேட்கும் அளவுக்கு, எங்கும் பரவலாய்க் காணப்பட்டது. இந்நோய் மேலும் பரவாமல் தடுக்க, ஹவாய் அரசாங்கம் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் அனைவரையும் 1865–ம் ஆண்டு "மொலாக்காய்" தீவிற்கு அனுப்பி வைத்தது. அங்க அவர்களை கவனிப்பாரின்றி செத்து மடிந்து கொண்டிருந்தார்கள்.

1873–ம் வருடம் "மாய்" என்ற இடத்தில் ஒரு சிற்றாலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அச்சமயம் அங்கு குழுமியிருந்த போதகர்களுக்கு, ஹவாய் பிஷப் ஒரு அறைகூவல் விடுத்தார். யார் போவார் மொலாக்காய் தீவிற்கு? என்பதே அந்த அறைகூவல். அத்தீவில் எந்த ஒரு மிஷனெரியும் நீண்ட நாள் பணி செய்ததில்லை.

அங்குள்ள தொழுநோயாளிகளைச் சரியான வழியில் நடத்த ஒருவரும் இல்லாததால், அவர்கள் துன்மார்க்க ஜீவியம் செய்து மடிந்து கொண்டிருந்தார்கள். அரசாங்கமோ ஒரு கடுமையான விதியைப் பிறப்பித்திருந்தது. மொலாக்காய் தீவிற்கு போகிறவர்கள் அங்கேயே இருந்து விடவேண்டும். மீண்டும் தாய் நாட்டுக்கு அவர்கள் திரும்பி வரக்கூடாது. அந்தத்தீவிலிருந்து வேறெங்கும் குஷ்டரோகம் பரவக்கூடாது என்பதற்காகவே இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. குழுமியிருந்தவர்கள் ஒருவரும் அங்கு செல்ல முன்வரவில்லை.

இறுதியில் ஒருவர் எழுந்து நின்றார். " நான் போகிறேன்" என்று தைரியமாகக் கூறினார். எல்லாரிலும் அதிகம் வயது உடைய போதகர் அவர் மிஷனெரி அனுபவமும் உடையவர். இவர் தனது இயற்பெயரான ஜோசப் டி வெஸ்டா என்ற பெயரை மாற்றி டாமியன் என்று ஒரு பரிசுத்தவானின் பெயரை ஏற்றுக் கொண்டிருந்தார். இவரின் பெற்றோர்கள் விவசாயிகள் தங்கள் மகன் வியாபாரம் செய்து பணம் ஈட்டவேண்டும் என்பது அவர்களின் ஆவல். இவருக்கோ நற்பணியாளராகச் செல்வதிலேயே நாட்டம். தன் 19–ம் வயதில் போதகர் பயிற்சியில் சேர்ந்தார்.

அதை முடிக்கும் முன்னதாகவே, திருச்சபை அவருடைய ஆர்வத்தைக் கருத்தில்கொண்டு, ஹவாய் தீவிற்கு மிஷனெரியாக அனுப்பி வைத்தது. இவரை

அனுப்பும் முன் இவரிடம் மீண்டும் அந்தத் தீவிற்கு போகிறவர் எவராயிருந்தாலும் குஷ்டரோகம் தாக்கி மரிக்க வேண்டியதாயிருக்கும். ஆகவே நன்றாக யோசித்து பதில் சொல்லுங்கள் என்ற போது, டாமியன் தன் தீர்மானத்தில் உறுதியாயிருந்ததினால் ஆடு, மாடுகளை ஏற்றிச் செல்லும் ஒரு படகில் பயணம் செய்து, குஷ்டரோகிகள் வாழும் மொலாக்காய் தீவைச் சென்றடைந்தார்.

அவருடன் அந்தப் படகில் 50 குஷ்டரோகிகளும் பயணித்தனர். மொலாக்காய் தீவில் இறங்கிய டாமியன் அதிர்ச்சியடைந்தார். அங்கிருந்த மக்கள் ஒவ்வொருவரும் சீழ் வடியும் புண்கள் உடையவர்கள். கை, கால் சூம்பினவர்கள் ஆக மொத்தம் 2000 குஷ்டரோகிகள் அந்தத்தீவிற்கு அனுப்பப்பட்டிருந்தனர். டாமியன் காலத்தில் அவர்களின் எண்ணிக்கை 800 ஆக குறைந்தது.

யாருக்கும் வீடுகள் கிடையாது. செடி, கொடி இலைகளால் அமைக்கப்பட்ட சிறு சிறு குடிசைகளில் அவர்கள் வாழ்ந்தனர். டாமியனுக்கும் தங்குவதற்கு இடமில்லை. குஷ்டரோகிகள் மத்தியில் பணி செய்ய அவருக்கு விருப்பமிருந்தாலும், அவர்கள் அவருடன் படுத்துறங்குவதை அவர் மனம் விரும்பவில்லை. ஆகவே பல நாட்கள் ஒரு மரத்தடியிலேயே உறங்கி வந்தார். வெகுநாள் கழித்து தனக்கென ஒரு குடிசையை அமைத்தார்.

குஷ்டரோகிகள் அனைவரும் பல்வேறு இடங்களிலிருந்து வந்ததினால் ஒருவருக்கொருவர் அறிமுகமாகாதவர்கள். ஆண்கள், பெண்கள்,குழந்தைகள், இளைஞர், முதியோர் என பலர். அவர்கள் அணிந்திருந்த உடைகள் அழுக்கு நிறைந்ததும், சீழ் வடிந்து நாற்றம் அடிக்கக் கூடியதாகவும் இருந்தன. அவர்களின் சிகிச்சைக்கு மருந்தொன்றும் கிடையாது. அங்கு ஒரு மருத்துவமனை இருந்தது. ஆனால் சிகிச்சைக்கு அங்கு சென்றவர், உயிருடன் மீள்வதில்லை.

வாழ்வில் யாருக்கும் நம்பிக்கை இல்லாத சூழ்நிலை. சீட்டு விளையாடுவதிலும், கூட்டமாக நடமாடுவதிலும், போதை மிகுந்த சாராயத்தைக் குடித்து மதிமயங்கி திரிவதிலும் நாட்களைக் கழித்தனர். மரிக்கும் தருவாயில் இருக்கும் பெண்களும், குழந்தைகளும் ஒரு சுவருக்குப் பின் தூக்கி வீசப்பட்டனர்.

இந்தச் சூழ்நிலையை மாற்ற டாமியன் பல முயற்சிகளை மேற்கொண்டார். ஆனால் தொழுநோயாளிகள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவரைப் பார்த்து ஆத்திரமடைந்தனர். அதுமட்டுமல்லாமல் டாமியனை அடிக்கவும் தொடங்கினர். ஒரு போதகர் தங்கள் வாழ்வில் குறுக்கிடுவதை அவர்கள் விரும்பவில்லை. இதன் மத்தியிலும் டாமியன் தாக்குப் பிடித்தாரானால், அவரது மன தைரியத்தையும், ஊழிய வாஞ்சையையும் காட்டுகிறது.

டாமியன் தான் செய்ய வேண்டிய காரியங்கள் ஏராளம் என்று அவர் உணர்ந்தார். பல்வேறு உதவிகளைக் கேட்டு ஹானலுலுவுக்கு டாமியன் பல கடிதங்கள் எழுதினார். அந்நகர மக்களும் உதவிப் பொருட்களை ஏராளமாய் அனுப்பி வைத்தனர். அதன் மூலம் ஒரு குழுவை அமைத்து வீடுகளை கட்டிக் கொடுத்தார். இறந்தவர்களைப் புதைப்பதிலும் சிரமங்கள் இருந்தன. பெட்டியில் வைத்து அடக்கம் செய்யும் பாக்கியம் ஒரு சிலருக்கே வாய்த்தது.

மற்றவர்கள் சிறிது ஆழம் தோண்டி புதைக்கப்பட்டனர். மழை பெய்தவுடன் அச்சடலங்கள் வெளியே தென்பட்டு, துர்நாற்றம் வீச ஆரம்பிக்கும் சூழ்நிலை ஏற்பட்டது. அநேக சமயங்களில் தானே குழிகளைத் தோண்டினார். சவப் பெட்டிகளையும் செய்ய ஆரம்பித்தார். அதுமட்டுமல்ல இம்மக்களுக்கு நல்ல தண்ணீர் வசதி செய்து கொடுத்தார். இதினால் நீண்ட நாட்களாய் உடுத்திய அழுக்கான துணிகளை துவைக்க முடிந்ததினால் பலருடைய கஷ்டங்களைப் போக்கினார் டாமியன்.

நல்ல நீர்நிலையைத் தேடி அலைந்து மிகவும் சிரமப்பட்டு ஒரு நீர்த்தடாகத்தை கண்டுபிடித்து தண்ணீர்க் குழாய்களை தரையில் புதைத்து நல்ல தண்ணீரை ஊருக்குள் கொண்டு வந்தார். அதுமட்டுமல்ல கட்டிடங்கள் கட்டுவது, சத்துள்ள ஆகாரம் மக்களுக்க வழங்குவது, மருத்துவமனைக்கு நல்ல மருந்துகள் பெறுவது ஆகிய ஏராளமானவைகளைச் செய்தார்.

மேற்கண்ட பல்வேறு நற்தொண்டுகளை செய்ததோடு டாமியன் ஒவ்வொரு நாளும் ஆராதனை நடத்தி அம்மக்களை நல்வழிப்படுத்தி, ஆவிக்குரிய வாழ்வில் வளர்க்கலானார். பல ஆலயங்களையும், சிற்றாலயங்களையும், அவர்கள் மத்தியில் கட்டி எழுப்பினார். பன்னிரண்டு ஆண்டுகளாக டாமியன் பல்வேறு காரியங்களைச் செய்தார். ஒருநாள் வேலை செய்துகொண்டிருக்கும்போது திடீரென கொதிக்கும் தண்ணீர் முகத்தில் தெறித்தது. ஆனால் முகத்தில் எந்த வலியும் ஏற்படவில்லை. இதுதான் அவரை சிந்திக்க வைத்தது. கொதிக்கும் நீர் முகத்தில் பட்டபோதும் வலியில்லை என்றால், அது ஒருவித குஷ்டரோகத்தின் அடையாளம். டாமியன் தனக்கு குஷ்டரோகம் வந்து விட்டது என்பதை புரிந்துகொண்டார். இதன் மத்தியிலும் மனம் தளராமல் தன் பணியைத் தொடர்ந்தார்.

நான்கு ஆண்டுகள் கடுமையாக உழைத்தார். அவருக்கு உதவியாக ஒரு உதவியாளர் வந்து சேர்ந்தார். டாமியன் குஷ்டரோகத்தின் கொடுமையால் படுத்தபடுக்கையானார். அவருடைய கைகள் கறுக்க ஆரம்பித்தது. மரணம் சமீபிக்கிறது என்பதை அது சுட்டிக்காட்டியது. மரிக்கும் தருவாயில் கடவுளுக்கு நன்றி கூறினார். அவரது பணியைத் தொடர இரண்டு போதகர்கள் வந்திருந்தனர். மருத்துவ மனையில் ஊழியம் செய்ய சில சகோதரிகளும் வந்து சேர்ந்தனர். தான் ஆரம்பித்த பணி, தொடர்ந்து நடைபெறும் என்ற நம்பிக்கையுடனும், நெஞ்சம் நிறைந்த மகிழ்வுடனும் இறைவன் பாதம் சேர்ந்தார். இவ்வாறான துணிச்சலான வாழ்க்கைக்கு நம்மை அர்ப்பணிக்க முடியமா?

கர்த்தரின் பணியில்

S.சுகுமாரன்

# 2019 ஜனவரி மாதத்திற்கான வேத வினா!

1. எனக்கு சுகமுமில்லை இளைபாறுதலுமில்லை என்றது யார்?

2. என் சுக வாழ்வு ஒரு மேகத்தை போலக கடந்து போயிற்று என்றது யார்?

3. மந்தைகளை காக்கும் நாய்களை பற்றி வாசிப்பதெங்கே?

4. சர்வ வல்லவராகிய தேவன் நீதியை புரட்டுவாரோ " என்றவன் யார்?

5. காட்டு கழுதைக் குட்டிக்கு ஒப்பாக பிறந்திருக்கிறவன் யார்?

6. நான் பாவஞ்செய்தேனானால் உமக்கு நான் செய்ய வேண்டியது என்ன" என்றது யார்?

7. என் ஆத்துமா என் ஜீவனை ஆராசிக்கிறது." என்றது யார்?

8. தராசில் தன் சஞ்சலத்தை நிறுக்க விரும்பினவன்யார்?

9. நிரோட்டத்தை போல தீவிரமாய் போவான் யார்?

10 தன் சொந்த கண்களோடே உடன்படிக்கை பண்ணின பக்தன் யார்?

11. தேவனுடைய ரகசிய செயல் யார் கூடாரத்தின் மேல் இருந்தது?

12. நான் பேசினாலும் பேசாமலிருந்தாலும் என் துக்கம் ஆறாது என்றவன் யார்?

13.என் மீறுதலையும் என் பாவத்தையும் எனக்க உணர்த்தும்" என்று ஜெபித்தவன் யார்?

14. ஒளியும் இருளாகும் தேசமெது?

15. விதைவையை வெறுமையாய் அனுப்பிவிட்டீர் என்று குறை கூறினது யார்?

விடைகளை வருகின்ற 20-01-2019 க்குள் சபையின் செயலாளரிடமோ அல்லது செய்திமலர் பொருப்பாளரிடமோ நேரில் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.. அல்லது விடைகளை (Whatapps மூலமும் Seithi Malar ATC குரூப்பில் அனுப்பவும் # 66015503 ) விடைகளை வேதாகமத்தில் லேவியராகமத்தில் ( யோபு 3,6,7,8,10,11,13,16,22,24, 29,30,31,அதிகாரத்தில் இருந்து பதிலைத் தேடுங்கள் ).

(குறிப்பு) செயற்குழு உறுப்பினர் அல்லாது மற்றவர்களிடம் விடைத்தாள் கொடுக்கும்பட்சத்தில் ..அந்த விடைத்ததாளுக்கு செய்திமலர் பொறுப்பாளர் பொறுப்பல்ல,

**– – –தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; – –**

மத்தேயு 7:7

## 2018 டிசம்பர் மாத வேத வினாவுக்கு பதில்

1. மனோற்சாகமாய் (லேவி 19:5) 2. கூலிக்காரனுடைய கூலி (லேவி 19:13)

3. பரிசுத்த ஸ்தலம்(லேவி 19:30)

4. தன்தகப்பனின் சகோதரனின் மனைவியோடு சயனிக்கிறவன் (இருவரும்) (லேவி 20:20)

5. மற்ற ஜனங்கள் (லேவி 20:26) 6. தங்கள் தேவனுக்கு (லேவி 21:06)

7. பிரதான ஆசாரியன்(லேவி 21:11) 8. அன்னியனுக்கு வாழ்க்கைபட்டால்(லேவி 22:12).

9. செலுத்துகிற அந்த நாளிலேயே (லேவி 22:30) 10. தகன பலியிட வேண்டும்(லேவி 23:18) 11.கர்த்தருக்கு தகனபலி(லேவி 23:25)

12. கூடாரங்களில் (லேவி 23:43) 13. ஆரோன் (லேவி 24:3)

14. ஆரோனனையும் அவன் குமாரரையும் (லேவி 24:9)

15. மோசே (லேவி 24:11)

## 2018 டிசம்பர் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சுகந்தி தம்பு குமார்

Sis. பத்மினி வர்கீஸ்

Sis. மெர்ஸிலின் தயா இயேசு ரெத்தினம்

Sis. லதா கிறிஸ்டோபர்

Sis. ஜீவி பாக்கியவதி வேதானந்தம்

Sis. செலின் டேவிட் ஜெயகுமார்

தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது.

ரோமர் 14:17

கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக, நம் சபையோர் அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்களை கூறிக்கொள்கிறேன். நம்முடைய வாழ்க்கை பயணத்தை அதாவது பாதையை அமைத்து கொடுத்தாவர் நம் தேவன், அவர் அமைத்து கொடுத்த வாழ்க்கை பாதையில் நம் பயணம் தொடரும்போது பொல்லாதவன் வந்து குறுகிட்டால் அவனை துரத்தவும், அவனை நம்முடைய வழியை விட்டு அகற்றவும், நமக்கு தேவயைான வல்லமையையும், அதிகாரத்தையும், தருபவரும் தேவனே, எனவே நம்மை நாமே சரி செய்து, நாம் தேவனுக்கு கீழ்படிந்து என் ஓட்டத்தை ஓடுகீறேனா? என்பதை சிந்தித்து வாழ்க்கை ஓட்டத்தை தொடரவேண்டும். தேவ சித்தத்தின் பாதையிலே எந்த பொல்லாத சாத்தான் எதிர்த்தாலும், இயேசுவின் நாமத்தில் அவனை துரத்தும் போது அவன் ஓடியே போவான், பிசாசுக்கு எதிர்த்துநிற்பதுதான் தேவ ஜனத்திற்கு தேவன் தந்திருக்கும் அதிகாரம்.

பிசாசுக்கு எதிர்த்து நின்று அவனை துரத்தி கீழ்காணும் காரியங்களில் தேவனுக்கு கீழ்படிய வேண்டும். முதலில் தேவ சித்தத்திற்கும் தேவ வசனத்திற்கும் கீழ்படிய வேண்டும். தேவனின் கட்டளைகீழ்படிய வேண்டும்.

## 1. தேவ சித்தத்திற்கு கீழ்படியுங்கள்

நாம் தேவனுடைய சித்தத்திற்கு கீழ்படிய வேண்டும், தேவன் நம் ஒவ்வொருடைய வாழ்க்கையை குறித்தும் ஒரு சித்தம் ஒரு நோக்கத்தை தனக்குள் வைத்திருக்கிறார். அதை விட்டு நாம் விலகும்போதுதான் தேவனுடைய பாதுகாப்பிலும், அதிகாரத்தையும், உரிமையையும் இழந்து தவிக்கிறோம். ..” கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன்.”( பிலி 3:12) என்று பவுல் அழகாய் கூறுகிறதை பார்க்கிறோம். தன்னுடைய வாழ்க்கையை குறித்து ஒரு காலத்திலே பல திட்டங்களை வைத்துக் கொண்டு தன் விருப்பபடி ஓடிக்கொண்டிருந்த பவுல் தமஸ்குவிற்குவிற்கு போகிற போது வழியிலே இயேசு கிறிஸ்துவால் பிடிக்கப்பட்டு இயேசுவே இரட்சகர் என்று அறிந்து ஏற்றுகக்கொண்டு தேவ சித்தத்திற்கு தன் வாழ்க்கையை ஒப்பு கொடுத்தார். தேவ சித்தம் நிறைவேற்றும் பாத்திரமாரான். ஐசுவரியனானாலும், மேன்மையுடையவாகளானாலும், இயேசு நமக்கென்று எந்த சித்தத்தை ஏற்படுத்தி இருக்கிறாறோ அதை நிறைவேற்ற தேவன் நீதியுள்ளவர் நிச்சயமாக நம் வாழ்க்கையில் நிறைவேற்றுவார். நம்மை உருவாக்கின தேவன் நமக்கு குடும்பம் மனைவி பிள்ளைகள் என்று உருவாக்கியவர் நம் தேவன் நம்மை குறித்து அவரது நோக்கமென்ன என்பதை நாம் அறிந்து அதன்படி செயல்பட வேண்டும். ஆகவே தேவ சித்தத்திற்கு கீழ்படிந்து நாம் வாழ்க்கையை வெற்றி பாதையாக மாற்றிடுவோம்!

## 2. தேவ வசனத்துக்கு கீழ்படிதல்:—

என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கி பார்ப்பேன் என்ற வனத்தின்படி, தேவனுடைய வார்த்தையாகிய வசனத்திற்கு கீழ்படிய வேண்டும். வசனத்தை வாசிப்பது மாத்திரம் அல்ல அதற்கு கீழ்படிந்து அதன்படி நடக்கிறவர்களாகவே இருக்க

வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். தேவனுடைய வார்த்தையை கடமைக்கு வாசித்து கட்டாயமாக வாசிக்க வேண்டும் என்ற வறைமுறைக்கு அப்பாற்பட்டு, நமக்கு விருப்பமானதை கை கொண்டு விரும்பாத அல்லது கடிணமான உபதேசத்தை விட்டு விட்டு செல்வது அல்ல அதை தேவன் ஒரு போதும் விரும்ப மாட்டார் யூதர்கள் தேவனுடைய நியாய பிரமானத்தை அப்படியே கை கொண்டார்கள் வசனத்துக்கு கீழ்படிந்தார்கள் அவருடைய வாழ்கதை செழிப்பானதாக இருந்தது இப்பொழுதும் இருக்கிறது. தேவ வசனத்தின் அடிப்படையில் தேவனிடம் மன்றாட வேண்டும் நம்மை அவர் முன் தாழ்த்தவேண்டும். அப்பொழுது தேவன் நமக்கு இந்த உலகத்தை ஜெயிக்க பெலன் தருவார் உலகத்தின் பாவத்தை மேற்கொள்ள அவரது வசனம் நம்மை புடமிட்டு பொன்னாக மின்ன செய்யும். சாத்தான் இதை கண்டு இடைமறிக்காமல் புற முதுகை காட்டி ஓடிப்போவான்.ஆமென்!

## 3. தேவ கட்டளைக்கு கீழ்படிய வேண்டும்:-

வேதத்தில் பார்க்கும் போது அநேக கட்டளைகளை தேவன் மனித வாழ்விற்கு ஆதாரமாக கொடுத்து இருக்கிறார்.இதிலே நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும், ஆதி பிதாவாகிய ஆதாம், ஏவாளை எடுத்து கொண்டோமானால் எல்லாவற்றையும் அனுமதித்து ஏதேனை ஆண்டு கொள்ள அதிகாரம் கொடுத்து இருந்தார். நம்மை தீமை அறித்தக்க கனியை அடையாளம் கண்டு புசிக்க அவர்களுடைய ஆவியின் கண்களை தேவன் திறந்து வைத்திருந்தார், கட்டளையும் கொடுத்தார், அந்த கட்டளைளை அவர்கள் அசட்டை செய்தார்கள், அந்த கீழ்படியாமையால் சாபம் மனிதனை ஆற்கொண்டது, அதே போல தேவன் மோசேயை அழைத்து ஆண்டவர் 10 கட்டளையை உலக சமூக ஒழுக்கம், ஆசாரிப்பு கூடாரத்தின் மூலமாக ஆராதனை ஒழுங்குகள், மிகவும் தெளிவாக கற்பலகையில் பொறித்து கொடுத்தார், அதை அவர்கள் கை கொண்டு நடக்கும் போது சத்துரு அவர்களை மேற்கொள்ள வந்தாலும் தேவ னுடைய வல்லமையால் அதை மேற்கொண்டார்கள். ஆனால் அவர்கள அந்த கட்டளையை கை கொள்ளாமல் போகும் தருவாயில் சத்ருக்களை மேற் கொள்ள பெலன் இல்லாமல் போனது தோல்வியை தழுவ நேர்ந்தது.

புதிய ஏற்பாட்டு காலத்தில் வாழுகிற ஒவ்வொரு மனிதனும்(அப் 2:38-42) வரை கூறப்பட்ட உபதேச சட்டங்களை தேவ கட்டளைகளுக்கு கீழ்படிய வேண்டும் தேவனுக்கு கீழ்படியாமல் இருந்தால். வாழ்க்கையில் சத்துருவை நாம் மேற்கொள்ள முடியாது. எனவே தேவ கட்டளைக்கு நாம் கீழ்படிய வேண்டியது அவசியமாக காணப்படுகிறது. அப்படி கீழ்படியும் போது நம்முடைய வாழ்க்கை வெற்றி பாதையில் செல்லும் என்பது அதிக தின்னம் இதை நாம் இந்த புதிய வருடத்தில் கடைபிடிக்க நம்மை நாம் ஆயத்தபடுத்தி கொள்வோம், ஆண்டவர் நம்மை இந்த புதிய வருடத்தில் அபரிவிதமாக ஆசீர்வதிப்பாராக ஆமென்!.

கிறிஸ்துவுக்குள்

அன்பு சகோதரி : மெர்ஸிலின் தயா இயேசு ரெத்தினம்

# கடந்த மாத நிகழ்வுகளில் சில உங்கள் பார்வைக்கு



உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக ஜெபியுங்கள்

செயற்குழு உறுப்பினர்கள்

சபை ஊழியர் – சகோ. ஸ்டாலின்

66021072

செயலாளர் – சகோ. ஆரோக்கியதாஸ்

99870126

பொருளாளர்– சகோ. எபநேசர்

23922058 - 50203472

பெண்கள் ஐக்கிய தலைவி

சகோதரி . பியூலா ஜெகநாதன்

60797360

வாலிப ஐக்கிய தலைவர் –

சகோ. ஆரோக்கியராஜ்

66159784

Church Website Address - ahmaditamilcongregation.org

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Private Circulation only